# கிழக்கு மாகாண சபையின் மாகாண அபிவிருத்தி அரங்கம்

## திருகோணமலை மாவட்ட கூட்ட அறிக்கை

**இடம்** : வரோதயநகர்கருத்தரங்கு மண்டபம்

**திகதி** : 16.05.2013

**வருகை தந்தோர்:**

- *பின்னிணைக்கப்பட்டுள்ளது*

### 1. வரவேற்புரையும் அறிமுகமும்

மாகாண அபிவிருத்தி அரங்கத்தின் திருகோணமலை கூட்டத்திற்கு வருகை தந்திருந்த கௌரவ முதலமைச்சர், அமைச்சர்கள், உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், செயலாளர்கள், பிரதிப்பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளை வரவேற்ற பிரதம செயலாளர் மாகாண அபிவிருத்தி அரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டதற்கான காரணங்கள் அதன் நோக்கங்கள் பற்றி விளக்கமளித்தார். கிழக்கு மாகாண சபையினால் அமுலாக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் கருத்திட்டங்கள் மாகாண மக்களின் அபிலாசைகள் தேவைகளுடன் இறுக்கமாக இணைந்திருக்கவும் மாகாண கொள்கை வழிகாட்டல்களை பலப்படுத்தவும் இந்த அரங்கம் வழிசமைக்கும் என தெரிவித்தார்.

அபிவிருத்தி திட்டமிடல் நடைமுறையில் பலதரப்பினரும் பங்குகொள்ளும் ஒரு அங்கமான இவ்வரங்கம் மூலம் தேவையான அபிவிருத்தி தகவல்களையும் மக்களின் அபிலாசைகளையும் உள்வாங்கி அவற்றினை சமூகத்திற்கு பயன் தரக்கூடியதும் சிறந்த பெறுபேறுகளை கொண்டதுமான அமுலாக்கல் திட்டங்களாக மாற்றுவதற்கு உதவும் என நம்பிக்கை வெளியிட்டார்.

### 2. கௌரவ முதலமைச்சரின் சிறப்புரை

கௌரவ முதலமைச்சர் அவர்கள் தனது சிறப்புரையில், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற தலைவர்கள் மற்றும் மாகாண சபை உயர் அதிகாரிகள் பங்குபற்றும் இந்த அபிவிருத்தி அரங்க கூட்டமானது வழமையான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் போலன்றி கொள்கை உபாய அணுகுமுறைகள், அபிவிருத்தி முன்னெடுப்புகள் மற்றும் நடைமுறை பிரச்சினைகளிற்கான தீர்வுகள் போன்றவற்றை மையப்படுத்திய கருத்தரங்கமாக அமைவதில் முக்கியத்துவம் பெறுவதாக மகிழ்ச்சி தெரிவித்தார். இவ்வரங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய கௌரவ முதலமைச்சர், இவ்வாறான நடைமுறை மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ளவும் முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கும் இது பெரிதும் வழிவகுக்கும் எனகூறி மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் இவ்வரங்கு விரைவில் நடைபெறவுள்ளது எனவும் தெரிவித்தார்

2012 ஆண்டில் கிடைக்கப்பெற்ற மட்டுப்படுத்திய நிதியுடன், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது கிழக்குமாகாண அமைச்சுக்களும் திணைக்களங்களும் மிகவும் சிறப்பாக செயலாற்றியுள்ளமை பற்றி விசேடமாக குறிப்பிட்ட அவர் அதற்காக பிரதம செயலாளர் உட்பட அனைத்து செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளையும் பாராட்டியதுடன் இவ்வருடத்திலும் தியாகமனப்பான்மையுடனும் நல்ல தலைமைத்துவத்துடனும் சிறப்பாக செயலாற்றுவார்கள் என எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

### 3. மாகாண திட்டமிடல் செயல்முறையும் அபிவிருத்தித் திட்டமும்

தேசிய அபிவிருத்தி கொள்கையுடன் இணைந்த வகையில் கிழக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த 5 ஆண்டு அபிவிருத்தி திட்டம் மற்றும் கிழக்கு மாகாண நிறுவன பெறுபேற்று உருவகமைப்பும் அவற்றில் நிர்ணயிக்கப்பட்ட வருடாந்த இலக்குகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு துறைசார் நிறுவனங்களுக்கான வருடாந்த அமுலாக்கல் திட்டங்கள் தயாரிக்கப்படும் படிமுறையினை மாகாண திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் சுருக்கமாக விளக்கமளித்து மாகாண அபிவிருத்திக்கு நிதி ஆணைக்குழுவினால் ஒதுக்கப்படும் நிதி மாவட்டங்களுக்கிடையில் கணிசமானளவு சமமாக பங்கீடு செய்யப்படுவதனையும் மற்றும் நிதி தேவை அதன் பற்றாக்குறை, கிடைக்கின்ற நிதியின் உச்ச பயன்பாடு பற்றியும் விளக்கினார்.

பல்வேறு நிதிமூலங்களினூடான சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்து திரட்டிய வருடாந்த அமுலாக்கல் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளதையும் சகலஅபிவிருத்திப் பங்காளர்களுக்கும் பயன்தரும் வகையில் இது இணையத்தின் மூலம் செயற்படுத்தப்படும் தரவு தளத்தினூடாக செயற்படவுள்ளமை பற்றியும் தெளிவுபடுத்தினார்.

கௌரவ சுகாதார அமைச்சர் அவர்கள் கிழக்கு மாகாணத்தில் சிறப்பாக இயங்கி வரும் திட்டமிடல் செயற்பாடுகளைப் பற்றியும் திட்டமிடலின் முக்கியத்துவத்தையும் விபரித்ததுடன் அது நிதி பற்றாக்குறையால் சில சந்தர்ப்பங்களில் வலுவற்றதாகி விடுவதினால் 2013 ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மாகாணத்திற்குரிய தேவைகளை விட மிகவும் குறைந்தளவு நிதியே வழங்கப்படுவதாகத் தெரிவித்த கௌரவ கல்வி அமைச்சரும் இதற்கான நடவடிக்கைகளை உரிய மட்டத்தில் எடுத்து அதிகரித்த நிதி கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கௌரவ எதிர்க் கட்சித் தலைவரும் இதற்கு ஆதரவான கருத்துக்களை தெரிவித்து உரிய நடவடிக்கைகளை கௌரவ முதலமைச்சர் அவர்கள் அதிமேதகு ஜனாதிபதியுடன் கலந்து பேசி போதிய நிதியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இவற்றிற்கு பதிலளித்த கௌரவ முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கும் நிதியினை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்குமான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## 4. அபிவிருத்தி துறை ரீதியான கலந்துரையாடல்கள்

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் விடயபரப்புகளிற்கமைவாக முக்கிய அபிவிருத்தி துறைகளை கருத்தில் கொண்டு பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

- உள்ளூர் சேவைகள் வழங்கல் மற்றும் கிராமிய அபிவிருத்தி
- கல்வி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து சேவைகள்
- உட்கட்டுமான அபிவிருத்தி
- விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி
- சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு முன்னேற்றங்கள்

ஒவ்வொரு தலைப்பிலான கலந்துரையாடலின் ஆரம்பத்திலும் குறிப்பிட்ட மாகாண அமைச்சு செயலாளர்கள் பிரதான அபிவிருத்திக் கூறுகள், முதலீடுகளின் சாராம்சம், நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்கால அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக விளக்கப்படவுரையை மேற்கொண்டு கலந்துரையாடலுக்கு வசதியளித்தனர்.

இதனை தொடர்ந்து ஒவ்வொரு அபிவிருத்தித்தலைப்புகளிலான கலந்துரையாடல்களின் போது பல்வேறு கருத்துக்கள் அரங்கில் பங்குபற்றியவர்களினால் முன்வைக்கப்பட்டன.

### 4.1. உள்ளூர் சேவைகள் வழங்கல் மற்றும் கிராமிய அபிவிருத்தி

திண்மக்கழிவு அகற்றும் வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலும் பற்றாக்குறையாகவும் உள்ளதால் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் அவ்வாகனங்களை திருத்துவதற்கு நிதியுதவி ஏற்படுத்தித் தருமாறும் அதேநேரம் மாகாண/வெளிநாட்டு நிதியுதவிகள் மூலம் புதிய திண்மக்கழிவு அகற்றும் வாகனங்களை கொள்வனவு செய்து தருமாறும் கிண்ணியா நகரசபை தலைவர் கேட்டுக் கொண்டார்.

பிரதேச சபைகளுக்கு வழங்கப்படும் நிதியானது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை எனவும் இதனை அதிகரித்துத் தருமாறும் பல உள்ளூராட்சி மன்றத்தலைவர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மாகாண அபிவிருத்தி அரங்கில் தம்மையும் பங்கு கொள்ளவைத்தமைக்கு நன்றி கூறிய குச்சவெளி பிரதேச சபைத் தலைவர், எம்மால் இவ்வரங்கில் எடுக்கப்படும் தீர்மானங்களை குறித்த ஒரு காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்துவதற்கு கௌரவ முதலமைச்சர் தலைமையிலான அமைச்சர்களும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவற்றிற்கு பதிலளித்த கௌரவ முதலமைச்சர் அவர்கள், மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இவ்வரங்கின் நோக்கங்களில் ஒன்று எனக்குறிப்பிட்டு, சகல மாகாண முதலமைச்சர்களுடனான கலந்துரையாடல்களின் போது அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொள்கிறார் என்றும் தேவையான உரிய நடவடிக்கைகள் இயன்றளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இதற்கு சகல அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் எனவும் தெரிவித்தார். அத்துடன் முன்னைய காலங்களைப் போலன்றி தற்போது வெளிநாட்டு உதவியுடனான பல அபிவிருத்தி கருத்திட்டங்கள் நேரடியாகவே உள்ளூராட்சி மன்றங்களினூடாக நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக நிதியீட்டத்திற்கான முயற்சிகளை தாம் மேற்கொள்வதாக தெரிவித்த கௌரவ முதலமைச்சர் அதேநேரம் கிடைக்கத்தக்க நிதிவளங்களை உள்ளூராட்சி மன்றங்கள் திறமையான முறையில் மக்கள் பயனுறும் வகையில் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள் தம்மால் முன்வைக்கப்பட்ட சிறு திட்டங்கள் யாவற்றையும் நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக மாகாணசபை உறுப்பினர்களிற்கு ஒதுக்கப்படும் நிதி 2.0 மில்லியன் ரூபாவையும் பூரணமாக விடுவித்துத் தரவேண்டும் என்று கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கப்பெறும் மொத்த நிதியில் மாகாணசபை உறுப்பினர்களின் வேலைத்திட்டங்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் ஏறத்தாழ 90 வீதத்திற்கு மேற்பட்டளவு நிதி விடுவிக்கப்படுகிறது எனவும் எதிர்காலத்தில் இதனை முழுமையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மீள் குடியேற்றம் மற்றும் புனரமைப்பு விடயங்களிற்கு 2013ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவானது என்றும் இந்த ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோரியதோடு அதற்குரிய வேலைத்திட்டங்களில் மூதூர் கிழக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மீள் குடியேற்றப்பட்டவர்களுக்கான உதவிகள் மற்றும் புனரமைப்பு தொடர்பாக ஜனாதிபதியினதும் அமைச்சரவையினதும் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகவும் கிழக்கு மாகாண சபைக்கு இவ்விடயங்களுக்காக மேலதிக நிதி உதவிகள் வழங்கப்படும் என்றும் கௌரவ முதலமைச்சர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்ற நடவடிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அநேக விடயங்கள் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளதால் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், செயலாளர்களுடன் பிரத்தியேகமான ஒரு கூட்டம் விரைவில் தமது அமைச்சில் ஒழுங்குபடுத்தப்படுமென கௌரவ முதலமைச்சர் தெரிவித்தார்.

### 4.2. கல்வி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து சேவைகள்

சேருவில பிரதேச சபைத் தலைவரும் கிண்ணியா நகர சபைத்தலைவரும் தமது பிரதேசங்களில் நிலவும் பாடசாலை வகுப்பறைக் கட்டிடங்களின் பற்றாக்குறை மற்றும் முடிவுறாத நிலையிலுள்ள கட்டிடங்கள் பற்றி கவலை தெரிவித்தனர். கிண்ணியா பிரதேசத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி கிண்ணியா பிரதேச சபைத்தலைவர் அரங்கின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

புதிய ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்றும் வகுப்பறைக் கட்டிடங்கள் மற்றும் முடிவுறாநிலையில் உள்ள கட்டிடங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதிலளித்தார்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக கௌரவ உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தம்முடன் எவ்வேளையிலும் நேரடியாகத் தயக்கமின்றி தொடர்பு கொள்ளும்படியும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியாக அமையுமென்றும் தெரிவித்தார்.

### 4.3. உட்கட்டுமான அபிவிருத்தி

கிராமிய வீதி முன்னேற்றத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தம்பலகாமம் வீதி வேலைகள் முடிவடையவில்லை என தம்பலகாமம் பிரதேச சபை தலைவரினால் தெரிவிக்கப்பட்டபோது

அவ்வேலைகள் யாவும் மே மாத இறுதிக்குள் முடிவடையும் என்று வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அலஸ் தோட்டப் பகுதியிலுள்ள வீதிகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் இவை சுற்றுலாப் பயணிகளுக்கும் கிராமத்தவர்களுக்கும் பெரிதும் அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது என்றும் தெரிவித்த பட்டணமும் சூழலும் பிரதேச சபைத்தலைவர் இவ்வீதிகளை துரிதமாக திருத்தம் செய்து தருமாறு கேட்டுக் கொண்டார். இதே போன்று வேறு பல வீதிகளும் திருத்தம் செய்யவேண்டிய நிலையிலுள்ளதாக இவர் தெரிவித்தார். இதனை ஏற்றுக்கொண்ட கௌரவ முதலமைச்சரும் சுற்றுலாத் தளங்களுக்கான பாதைகளின் புனரமைப்பு முக்கியமானது என்றும் இத்துடன் நிலாவெளி சுற்றுலா விடுதிக்கான பாதையையும் விரைவில் புனரமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

கிண்ணியா நகரசபைத்தலைவர் தமது பகுதிகளில் கிராமிய வீதி முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 2012ம் ஆண்டில் அமைக்கப்பட்ட பல வீதிகள் குறைந்த தரம் காரணமாக உடைந்துவிட்டன என்றும் இவற்றினை துரிதமாக திருத்தியமைத்துத் தரும்படியும் கோரிக்கை விடுத்தார்.

கோமரங்கடவெல – மொரவேவ வீதி திருத்தப்பட வேண்டும் என்று கோமரங்கடவெல பிரதேச சபைத்தலைவர் தெரிவித்த போது இத்திருத்த வேலை செய்வதாயின் பிரதான வீதி மூன்று நாட்களுக்கு மூடப்படவேண்டியிருக்கும் என்று மாகாண வீதிப்பணிப்பாளர் தெரிவித்தார். தெஹிவத்த வீதி திருத்த வேலைகள் விரைவில் தொடங்கப்படவிருப்பதாகவும் திருகோணமலை – சுவேதகம வீதி மற்றும் மொரவேவ 8 கிலோ மீற்றர் வீதி ஆகியவற்றின் திருத்த வேலைகள் விரைவுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பூர் பிரதான வீதி போக்குவரத்திற்காக திறந்து விடப்பட வேண்டும் அல்லாவிடில் அதற்கு மாற்றீடாக போடப்பட்ட வீதி திருத்தப்படவேண்டும் என்று மாகாணசபை உறுப்பினர் கேட்டுக் கொண்டார். எவ்வாறாயினும் சம்பூர் பிரதான வீதியை திறப்பதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

தாஹாநகர் வீதி மூன்று வருடங்களாக சேதமடைந்து காணப்படுகிறது. மற்றும் பெரியபாலம் பள்ளிவாசல் வீதி, தபாற்கந்தோர் வீதி, மூதூர் சந்தை வீதி என்பனவும் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இவ்வீதிகள் துரிதமாக திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று மூதூர் பிரதேச சபைத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

இவற்றிற்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தி அமைச்சர், ஒதுக்கப்படும் நிதியானது மூன்று மாவட்டங்களிற்கும் மூன்று இனத்தவர்களுக்கும் கணிசமானளவு சமமாகப் பகிரப்படுகின்றது. ஆகவே உடனடியாக இல்லாவிட்டாலும் காலக்கிரமத்தில் இவ்வீதிகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தரக்குறைவான வீதிகள் மற்றும் உடைந்த வீதிகள் போன்றவற்றை இனங்கண்டு தகுந்த நடவடிக்கைகளுக்கு சிபார்சு செய்ய தமது அமைச்சில் செயலாளர் தலைமையிலான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், அக்குழு தமது நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உப்புவெளியில் அமைந்துள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்திற்கு செல்லும் பண்ணை வீதியில் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதாகவும் இதனால் பயிற்சி நிலையத்திற்கு வருபவர்களும் கிராம மக்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் இதனை உடனே திருத்தியமைக்கவேண்டுமெனவும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்கள பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பட்டணமும் சூழலும் பிரதேசசபைத் தலைவர் இவ்வீதியானது கிராமிய வீதி முன்னேற்றத் திட்டத்தினுள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அது தாமதமாகுமானால் பிரதேச சபையானது அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார். இவ்வீதியினை தற்காலிகமாகவேனும் தாமதமின்றி திருத்தியமைக்குமாறு கௌரவ வீதி அபிவிருத்தி அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நீலப்பொல வீதி திருத்தப்பட வேண்டும் என்று சேருவில பிரதேச சபைத்தலைவரினாலும், சாம்பல்தீவு வீதி திருத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவரினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் முடிவுறாத நிலையிலிருக்கும் செல்வநாயகபுரம் கதிர்காமத்தம்பி வீதி வேலைகளை பூர்த்தி செய்து தருமாறு பட்டணமும் சூழலும் பிரதேசசபை தலைவரினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

திருகோணமலை பல்கலைக்கழகத்துக்கு செல்லும் வீதி புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று கௌரவ மாகாணசபை உறுப்பினர் ஜனார்த்தனனால் கோரப்பட்ட போது தானும் கௌரவ மாகாணசபை

உறுப்பினரும் பிரதேச சபைத்தலைவரும் அவ்வீதியின் நிலைமையை நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக கௌரவ அமைச்சர் தெரிவித்தார்.

கந்தளாய் - வான்எல வீதி, உமர் வீதி, கிண்ணியா மாஞ்சோலை கரையோர வீதி பெரிய சுற்றுமுனை வீதி என்பன உட்பட கந்தளாய் மற்றும் கிண்ணியாவிலுள்ள ஏனைய பல வீதிகளும் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று கௌரவ மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேட்டுக்கொண்டார்.

கௌரவ அவைத்தலைவர் வீதிப்புனரமைப்பின் தரம் மற்றும் முடிவுறாத நிலையிலிருக்கும் வீதிகள் தொடர்பான மேற்பார்வையிடலில் தானும் இணைந்துகொள்வதில் விருப்பம் தெரிவித்தார்.

### 4.4. விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி

விவசாயக் கிணறுகள் அமைப்பதற்காக பயனாளிகளுக்கு மாகாண நிதித்திட்டத்தில் வழங்கப்படும் 50,000 ரூபா போதுமானது அல்ல என்றும் இதற்கு உண்மையில் ஏறத்தாழ 300,000 ரூபா வரையில் செலவாகிறது என்றும் விவாதிக்கப்பட்டது. இந்நிலையில் கிணறுகளின் எண்ணிக்கையைக் குறைத்தேனும் வழங்கப்படும் மானியத் தொகையை அதிகரிக்கவேண்டும் என ஆலோசனை கூறப்பட்டது. இத்தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்த கௌரவ சுகாதார அமைச்சர் வழமையான நடைமுறைகளிலிருந்து விலகி உற்பத்தித்திறன் மிக்க நடைமுறைகளுக்கு நகரவேண்டியது காலத்தின் தேவையாகும் எனக்குறிப்பிட்டார்.

### 4.5. சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு முன்னேற்றங்கள்

கிண்ணியாவில் அமைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கு போதிய தளபாடங்களும், உபகரணங்களும் வழங்கப்படவில்லை என்றும் இதனால் நோயாளிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர் என்றும் கிண்ணியா நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

மூதூர் வைத்தியசாலையில் வைத்தியர்கள் தங்கும் விடுதி அவசியம் தேவைப்படுவதாகவும், பழுதடைந்துள்ள ஜெனரேட்டர் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்றும் மூதூர் பிரதேச சபைத்தலைவர் கேட்டுக்கொண்டார். இவ்வேளையில் கௌரவ மாகாணசபை உறுப்பினர் அன்வர் ரம்லான் மூதூர் வைத்தியசாவையிலுள்ள சவச்சாலையின் குளிரூட்டி இயந்திரமும் பழுதடைந்துள்ளது என்றும், அதனையும் திருத்தித்தருமாறு கோரினார்.

கௌரவ சுகாதார அமைச்சர் அவர்கள் இக்குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்து தருவதாக பதிலளித்தார்.

மொரவேவ வைத்தியசாலையில் மருத்துவர்கள் நியமிக்கப்படாமல் இருக்கும் குறைபாட்டை மொரவேவ பிரதேச சபைத்தலைவர் எடுத்துக்காட்டினார். இவ்வாறே நாமல்வத்தையிலும் வைத்தியர்களும் துணைமருத்துவ அலுவலர்களும் இல்லை என்றும் எடுத்துக்காட்டப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச சபைத்தலைவர் தற்போதுள்ள விளையாட்டு மைதானத்தை திருத்தித்தருமாறு கௌரவ சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

இங்கு கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட சுகாதார மற்றும் விளையாட்டுத்துறைகளில் உள்ள குறைபாடுகள், அவசியத் தேவைகள் மற்றும் ஆளணிப்பற்றாக்குறை என்பவற்றை அமைச்சின் காத்திரமான நடவடிக்கைகளுடனும் மாகாண ஆளுனர் மற்றும் செயலாளர்களின் உதவியுடனும் கூடிய விரைவில் நிவர்த்தி செய்யவும் அவசியத்தேவைகளை நிறைவேற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கௌரவ சுகாதார அமைச்சர் பதிலளித்தார்.

அபிவிருத்தி அரங்கின் நிறைவு வேளையின் போது அனைவருக்கும் நன்றி தெரிவித்த பிரதம செயலாளர், அரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் குறைபாடுகளுக்கு மேலதிகமாக ஏதேனும் தெரிவிக்கப்பட வேண்டிய விடயங்கள் அல்லது தேவைகள் இருப்பின் அவற்றினை எழுத்து மூலமாக அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டதுடன் அடுத்த மாவட்டக்கூட்டங்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விரைவில் நடாத்தப்படும் எனத் தெரிவித்து இவ்வரங்கினை நிறைவு செய்துவைத்தார்.

டி.எம்.எஸ். அபயகுணவர்த்தன
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாண சபை

**Provincial Development Forum of EPC – Trincomalee District Meeting**

*Venue : Conference Hall, EPC, Varothayanagar.*

*Date : 16th May 2013*

*Time : 9.30 a.m.*

**Participants:**

| | |
|---|---|
| 1. Hon. Najeeb Abdul Majeed | Chief Minister, EPC |
| 2. Hon. Wimalaweera Dissanayaka | Minister, Ministry of Education& Cultural Affairs |
| 3. Hon. M.S.Udumalebbe | Minister, Ministry of Road Dev. & Irrigation |
| 4. Hon. I.M. Mohamed Mansoor | Minister, Ministry of Health& Social Services |
| 5. Hon. Ariyawathi W.G.M. Galappaththi | Chairperson, EPC |
| 6. Hon. S. Thandauthapani | Opposition Leader, EPC |
| 7. Hon. Thuraiyappa Nawarathnarajah | Member of the Provincial Council |
| 8. Hon. Anwar Ramlan Mohamed | Member of the Provincial Council |
| 9. Hon. K. Nageswaran | Member of the Provincial Council |
| 10. Hon. N.G.W.M. Jayantha Wijesekara | Member of the Provincial Council |
| 11. Hon. Imran Mahroof | Member of the Provincial Council |
| 12. Hon. J.Jenarthanan | Member of the Provincial Council |
| 13. Hon. M.M. Hilmi | Chairman, UC, Kinniya |
| 14. Hon. R. Vijendran | Chairman, PS, Town & Gravets |
| 15. Hon. A. Mubarak | Chairman, PS, Kuchchaveli |
| 16. Hon. S.L.M. Jawadullah | Chairman, PS, Kinniya |
| 17. Hon. W.R. Rambanda | Chairman, PS, Morawewa |
| 18. Hon. L.B.C. Vijitha Kumara | Chairman, PS, Gomarankadawela |
| 19. Hon. A.M.Harees | Chairman, PS, Muthur |
| 20. Hon. W.M.N. Priyankara Wijesingha | Chairman, PS , Seruwila |
| 21. Hon. C. Vijayakanth | Chairman, PS, Verugal |
| 22. Hon. S.M.Subiyan | Chairman, PS, Thambalagamam |
| 23. Hon. P.A. Kapila Nuwan Athukorala | Chairman, PS, Kantale |
| 24. Mr. D.M.S. Abayagunawardana | Chief Secretary, EPC |
| 25. Mr. V.Mahendrarajah | Deputy Chief Secretary, Planning |
| 26. Mr. U.L.A. Azeez | Secretary to the Chief Minister |
| 27. Mrs. J.J.Muraleetharan | Secretary to the Governor |
| 28. Mr. A.H.M.Anzar | Secretary, Ministry of Road Dev. & Irrigation |
| 29. Mr. K.Pathmanathan | Secretary, Ministry of Agriculture & Rural Industries |
| 30. Dr. S.Amalanathan | Secretary, Ministry of Health& Social Services |
| 31. Mr. K.Karunakaran | Secretary, Assembly Secretariat |
| 32. Mr. H.E.M.W.G.Dissanayaka | Secretary, PPSC |
| 33. Mr. S.Kumaraguru | Deputy Chief Secretary, Finance |
| 34. Eng. K.Paskarathas | Deputy Chief Secretary, Engineering Services |
| 35. Mr. S.M.Ibrahim | Chief Internal Auditor, Provincial Audit |
| 36. Mr. J.A.Karunaratna | Chairman, Transport Authority |
| 37. Dr. P.K.Gnanakunalan | Provincial Director, Health Services. |
| 38. Mr. Uthayakumar | Provincial Commissioner, Local Government |
| 39. Mr. M.T.A. Nizam | Provincial Director, Education |
| 40. Dr. Mrs. R.Srithar | Provincial Commissioner, Indigenous Medicine |
| 41. Mr. S.M.Husain | Provincial Director, Agriculture |
| 42. Dr. T.K.Thavarajan | Provincial Director, AP&H |
| 43. Eng. V.Karunanaathan | Provincial Director, Road Development |
| 44. Eng. A.Velmanickam | Provincial Director, Building |
| 45. Mr. Viraj Perera | Provincial Commissioner, Cooperative Development |
| 46. Mr. T.M.L.D.Tennakoon | Provincial Director, Rural Industries |
| 47. Mr. K.Arunthavarajah | Provincial Director, Rural Development |

| | |
|---|---|
| 48. Mr. N.Manivannan | Provincial Director, Social Services. |
| 49. Mr. I.M.Mubarak | Provincial Commissioner, Probation & Child Care |
| 50. Mr. N.Mathivannan | Provincial Director, Sports |
| 51. Dr. Mrs. A. Rajmohan | Regional Director of Health Services |
| 52. Mr. A.S.M.Fayis | Director, MDTD |
| 53. Mrs. S.Sivakenga | Provincial Commissioner, Motor Traffic |
| 54. Mr. W.M.H.Udayakumara | Director General, Transport Authority |
| 55. Mr. B.Sivapiragasam | Director- Planning, PPS |
| 56. Mr. N.Thamilchelvan | Director- Planning, M/Local Government |
| 57. Dr. R.Gnanasehar | Director- Planning, M/Agriculture |
| 58. Mr. K.Pakkiyarajah | Director- Planning, M/Road Development |
| 59. Mr. S.Suntharalingam | Director- Planning, M/Education. |
| 60. Mr. V.Gowritharan | Director- Planning, M/Health& Social Services |
| 61. Mr. S.Suthaharan | Deputy Director, Fisheries |
| 62. Eng. V. Rajagopalasingam | Deputy Director, Irrigation |
| 63. Eng. S. Ganeshalingam | Deputy Director, Irrigation |
| 64. Mr. A.S.M. Harees | Deputy Director, Agriculture |
| 65. Mrs. S.Punniyamoorthy | Deputy Director, PPS |
| 66. Mr. K.Kunanathan | Asst. Commissioner, Local Government |
| 67. Mr. T. Gajenthiran | Asst. Commissioner, Land |
| 68. Mr. M.A.Munazir | Asst. Director, PPS |
| 69. Mr. I.U.K.Senevirathne | Asst. Director Planning, M/Local Government |
| 70. Dr. P.Puvanenthiran | Asst. Director, Animal Production |
| 71. Eng. P. Rasamohen | Chief Engineer, Road Development |
| 72. Eng. A.S.Gowripalan | Provincial Engineer, Local Govt. |
| 73. Dr. G. Gunalan | Medical Superintendent, General Hospital |
| 74. Dr. S. Nizamdeen | District Veterinary Surgeon |
| 75. Mr. K. Lingeswaran | Accountant, Irrigation |
| 76. Mrs. S.Malarville | Administrative Officer, PPA |
| 77. Mrs. A.C.S.Fareena | Programme Assistant, PPS |
| 78. Mrs. S.Yasothara | Programme Assistant, PPS |
| 79. Mrs. S.Arulvaratharajaah | Development Officer, Assembly Secretariat |
| 80. Mr. M.I.M.Manfoos | Development Officer, PPS |
| 81. Mr. S.Subash | Development Officer, PPS |
| 82. Mrs. T.Pratheepa | Development Officer, PPS |
| 83. Ms. V.Thadshayini | Development Officer, PPS |
| 84. Ms. M.M.Murshidha | Development Officer, PPS |
| 85. Mr. S.Sajeeshankar | Development Officer, PPS |
| 86. Mrs. N.Amalini | Development Officer, PPS |
| 87. Ms. K.Thushyanthi | Development Officer, PPS |
| 88. Ms.K.Thalirvany | Development Officer, PPS |
| 89. Mr. M.Y.M.Azeek | Development Officer, PPS |
| 90. Mr. S.Godfree | Management Assistant, UC, Trincomalee |
| 91. Ms. G.Cynthia | Management Assistant, PPS |
| 92. Mr. A.Ramanatharsanan | Data Entry Operator, PPS |
| 93. Mr. T.Farees | Data Entry Operator, M/Health& Social Services |